I Additional District Court, Thoothukudi.

O.S.No.147/2022 நாள் : 13.11.2025 வா.சா.1– திரு. சிவகுமார்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–

தாவா சொத்தைப் பொறுத்து வில்லங்கச் சான்றிதழை தாக்கல் செய்ய முடியும். சிட்டி யூனியன் வங்கியில் அடமான வைத்த சொத்துக்கள் மீட்கப்பட்டது. அதற்கான ஆவணம் தாக்கல் செய்யமுடியும். 2023 ல் சொத்துக்களை மீட்டேன். சாட்சி மீண்டும் பணம் முழுவதும் கட்டிவிட்டேன் என்றும், சொத்தை இன்னும் மீட்டுக் கொள்ளவில்லை என்றும் மாற்றிக் கூறுகிறார். பணத்தை எந்த தேதியில் கட்டினேன் என்பதை நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை. என் தாயார் 14.08.2010 ல் இறந்தார். வழக்குரையில் உள்ள 29 வது அயிட்ட சொத்து என் தகப்பனாருக்கு வாய்மொழி பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. என் தகப்பனாருக்கு சொத்து ஒதுக்கப்பட்டது. அதை நான் வழக்கில் சேர்க்கவில்லை. சாட்சி மீண்டும் அவருக்கு சொத்து ஒதுக்கப்படவில்லை என்றும், அந்த சொத்து அவருடைய சொந்த சொத்தும் என்றும் மாற்றிக் கூறுகிறார். என் தகப்பனாரின் சொத்து சுரைக்காய்பட்டி கிராமம், புல எண் 125/1 ல் உள்ளது. 13 வது தபசில் சொத்து என் தாயாருக்கு பிறகு என் தகப்பனாருக்கும், அவரது பிள்ளைகளான எங்கள் மூவருக்கும் சென்றடைய வேண்டுமென்று வா.சா.ஆ 1 உயிலில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 19 ம் தபசில் சொத்தில் என் தகப்பனாருக்கு பாதி பாத்தியம் உண்டு. மீதி பாதியும் என் தகப்பனார்தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. மீதி பாதியும் வாய்மொழி பாகப்பிரிவினையில் என் தகப்பனாருக்குத்தான் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 20 ம் தபசில் சொத்தில் வாய்மொழி பாகப் பிரிவினையில் தென்பகுதி என் தகப்பனாருக்கும், வடபகுதி 1 ம்

பிரதிவாதிக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 23ம் தபசில் சொத்தில் வடக்கே 1ம் பிரதிவாதிக்கும், மத்தியில் எனக்கும், தெற்கே 2ம் பிரதிவாதிக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 24ம் தபசில் சொத்தில் மேற்கே 2ம் பிரதிவாதிக்கும், மத்தியில் எனக்கும், கிழக்கே 1ம் பிரதிவாதிக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 25ம் தபசில் சொத்தில் மேற்கே 2ம் பிரதிவாதிக்கும், மத்தியில் எனக்கும், கிழக்கே 1ம் பிரதிவாதிக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 26ம் தபசில் சொத்தில் மேற்கே 2ம் பிரதிவாதிக்கும், மத்தியில் எனக்கும், கிழக்கே 1ம் பிரதிவாதிக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 29ம் தபசில் சொத்து 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 18ம் தபசில் சொத்து முழுவதும் எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 30ம் தபசில் சொத்தில் மேற்கே 2ம் பிரதிவாதிக்கும், மத்தியில் எனக்கும், கிழக்கே 1ம் பிரதிவாதிக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 31ம் தபசில் சொத்து 1, 2 பிரதிவாதிகளின் சுயார்ஜித சொத்து என்றால் சரியல்ல. சுரைக்காய்பட்டி கிராமம், புல எண் 36/1ல் உள்ள சொத்தை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. அந்த சொத்து பொது குடும்ப வருமானத்திலிருந்து என் பெயரில் வாங்கிய சொத்து என்றால் சரியல்ல. அது பொதுகுடும்ப சொத்துதான். அந்த சொத்தில் தீப்பெட்டி அலுவலகம் நடந்து வந்தது. தற்போது தீப்பெட்டி அலுவலகம் இல்லை. 13.09.2017 அன்று புல எண் 553/3, மனை எண் 29–ஐ நான் கூட்டுக் குடும்ப வருமானத்திலிருந்து வாங்கினேன் என்றும், அதை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றும் சொன்னால் நான் எதுவும் அப்படி வாங்கவில்லை. அந்த சொத்து குறித்து என் பெயரில் கிரையம் இல்லை. எட்டைபுரம் கிராம புல எண் 553/9, விஸ்தீரணம் 2.41 ஏக்கரில் மனை எண் 10–ஐ நான் சுடலைமணி என்பவருக்கு நான் கிரையம்

செய்துவிட்டேன் என்றால் சரியல்ல. அது பொதுகுடும்ப சொத்து என்றும், அதை பிரதிவாதிகளுக்குத் தெரியாமல் கிரையம் செய்துவிட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. அப்படி ஒரு கிரையமே நடைபெறவில்லை. அந்த சொத்துக்களை சேர்க்காததாலும், சுடலைமணியை தரப்பினராக சேர்க்காததாலும் இந்த வழக்கு தள்ளுபடியாக வேண்டுமென்றால் சரியல்ல. பொது குடும்ப சொத்திலிருந்து வந்த வருமானத்தை வைத்து என் மனைவி கோமதி ஜெயலட்சுமி அவர்கள் பெயரில் எட்டையபுரம் வட்டம், சிதம்பராபுரம் கிராமத்தில் கேபிள் டிவி நடத்தி வருகிறேன் என்றும், அதையும் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றும், அதனால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி மற்றும் அவரது மனைவி விஜயலெட்சுமி ஆகியோர் பெயரில் உள்ள தனிப்பட்ட கேபிள் டிவி பொதுகுடும்ப சொத்து என்று வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தற்போது குடியிருக்கும் சண்முகவேல் நகரில் உள்ள வீட்டின் புல எண் 562/3ஏ என்றால் சரிதான். அந்த சொத்தை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்பதால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ஏற்கனவே நடந்த வாய்மொழி பாகப்பிரிவினை அடிப்படையில் நாங்கள் மூவரும் எங்கள் தகப்பனாரும் தனித்தனியாக சொத்தை அனுபவித்து வரும் நிலையில் பாகம் ஆகவில்லை என்று தாக்கல் செய்த இந்த வழக்கு தள்ளுபடியாக வேண்டுமென்றால் சரியல்ல. பகுதி பாக பிரிவினைக்காக பரிகாரம் கேட்டுள்ளதாலும் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என் தகப்பனார், சிட்டி யூனியன் வங்கி ஆகியோரை தரப்பினர்களாக சேர்க்காததால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் அனுப்பிய சட்ட அறிவிப்பிற்கு பிறகு என் தகப்பனாரும், உறவினர்களும் சேர்ந்து வாய்மொழி பாகப்பிரிவினையை செய்து வைத்தார்கள் என்றும்,

அதை நான் மறுக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. வருவாய்த்துறை ஆவணங்கள்படி சொத்துக்கள் உட்பிரிவு செய்யப்படவில்லை என்பதால் அதை சாதகமாக்கிக் கொண்டு பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கிராம உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். அதனால் நான் சொத்தை விற்றாலோ, வாங்கினாலோ அரசு முன் அனுமதி பெறவேண்டுமென்றால் சரிதான். இந்த வழக்கு பொய்யானது என்றும், தள்ளுபடியாக வேண்டுமென்றும் சொன்னால் சரியல்ல.

M THANDAVAN Digitally signed by M THANDAVAN Date: 2025.11.13 16:28:25 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.